பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 11 | புதன்கிழமை | 27.12.2023 | கதிர் 411

# சம்பந்தன், சுமந்திரன் விரும்புகின்ற தீர்வுக்கு ஒருபோதும் இணங்கோம்

## பொது ஜன பெரமுனவின் செயலர் அறிவிப்பு

தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் விரும்பும் அரசியல் தீர்வை வழங்க ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஒருபோதும் இணங்காது என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் தெரிவித்தார். அவர்கள் இருவரும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேசநாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கமையச் செயற்படுபவர்கள் என்றும்சாகரகுற்றஞ்சாட்டினார். அண்மையில் ஜனாதிபதிக்கும் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்தஜனாதிபதித்தேர்தலில்பொது ஜன பெரமுன எனப்படும் மொட்டுக் கட்சியின்வேட்பாளராகத்தொழிலதிபர் தம்மிக்கபெரேராகளமிறக்கப்படக்கூடும் என்கிற வகையில் செய்திகள் பரப்பப்படுகின்றன. அவர் உட்பட நான்கு பேர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தயாராகஇருக்கின்றனர் என்று கட்சியின் செயலாளரும் தலைவர் மகிந்தவும் அண்மையில் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் கட்சிக்குள் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கான வெளி அழுத்தங்களை அதிகரிப்பதற்கான நகர்வுகளை தம்மிக்க பெரேரா தொடங்கியுள்ளார் என்பதை நேற்றுக் கூறியிருந்தேன்.

இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் 2

# ஜனாதிபதி தேர்தலில் ரணில் வெல்வது கேள்விக்குறியே

## விக்னேஸ்வரன் ஆரூடம்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெறுவது கேள்விக்குறியே என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான, நாடாளுமன்ற உறுப்பினர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார். மொட்டுக் கட்சியில் களமிறங்கும் ஜனாதிபதி வேட்பாளர் சாதகமாக அமைந்தாலன்றி ரணிலுக்கு வெற்றி வாய்ப்புக்கள் குறைவு என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம்பேசியபோது 8

# மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு காரணமான இந்திய, பிரித்தானிய அரசுகள் உதவுவது கட்டாயம்

## மனோ கணேசன் இடித்துரைப்பு

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர்களின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு தார்மீக பொறுப்பேற்கவேண்டும். இந்த வரலாற்றின் காரணமாக, எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார்மீகக் கடப்பாடு இன்று, இந்திய, பிரித்தானிய அரசுகளுக்கு உண்டு. அதை இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கும் நிறைவேற்றவேண்டும் எனக் கோருகிறேன்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானமனோ கணேசன் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணிசார்பில்நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தலைமையில் நுவரெலியாவில் நடைபெற்ற ’200இல் மலையக மாற்றம்’விழாவில்உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின் சிங்கள, ஈழத் தமிழ், முஸ்லிம் சகோதர இனத்தவர் தங்கள் ஓட்டங்களை 1948லேயே ஆரம்பித்து விட்டார்கள். மலையக தமிழர் தமது குடியுரிமையை சட்டப்படி முழுமையாக பெற்றுக்கொள்ளவே 2003ஆம் வருடம் ஆகிவிட்டது. ஆகவே நாம் எமது ஓட்டத்தை தாமதமாக 2

# தையிட்டில் நேற்றும் போராட்டம்

தையிட்டியில் தமிழர்களின் காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள விகாரையயைனை அகற்றுமாறு கோரி பௌர்ணமி தினமான நேற்று இரண்டாவது நாளாகப் போராட்டம்இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், அபகரிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எனச் சிலர் கலந்துகொண்டனர்.

இந்த விகாரைக்கு எதிராக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னணியினர் கடந்த பல மாதங்களாகத் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். பௌர்ணமி தினத் தையொட்டி 2

# மத்திய வங்கி பிணைமுறி மோசடியை விட சீனி வரிக் குறைப்பு மோசடி பாரதூரமானது

## வரி பற்றி ராஜபக்ஷக்கள் பேசக்கூடாது என்கிறார் சம்பிக்க

ரணிலின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பிணைமுறிமோசடியைக் காட்டிலும் சீனி வரிக் குறைப்பு மோசடி பாரதூரமானது. ஆகவே வரிக் குறைப்புத் தொடர்பில் அறிக்கை விடுவதை மஹிந்த ராஜபக்ஷ தவிர்த்துக் கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாவல பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வரி அதிகரிப்பு தனது கொள்கையல்ல, வரி குறைப்பு பொருளாதார கொள்கையில் ஒன்றாக காணப்படுகிறது. ஆகவே வரி அதிகரிப்புக்கு தான் எதிர்ப்பு என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடக அறிக்கை 2

# வடக்கில் உ.கிழங்கு செய்கைக்கு மானியம் பெற்றுத் தரவேண்டும்

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை



வடக்கில் அடுத்த பருவ காலத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையை சுமார் 150 ஹெக்ரேயரில் மேற்கொள்வதற்கு 50 வீத மானியத்தினை பெற்றுத் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இந்தக் 2

# மருந்துப் பொருள்கள் இறக்குமதி மோசடி குறித்து அமைச்சர் ஹெகலியவிடம் பொலிஸ் வாக்குமூலம் பதிவு

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெல்லவி நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர். அமைச்சரின் வீட்டிற்குச் சென்று இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

ரம்புக்வெல்லவின் சட்டத்தரணிகள் குழுவின் முன்பாக இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

தரமற்ற மருந்துப் பொருள்கள் இறக்குமதி தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் உட்படச்சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அமைச்சரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் யாழ். வருகையின்போது காணிகள் விடுவிப்புக்குப் பச்சைக்கொடி

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதிவரும்வேளை காணி விடுவிப்புக்கள் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வனவள பாதுகாப்பு, வன ஜீவராசி திணைக்களம் என்பவற்றின்கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணிகளை 11 கட்டங்களாக விடுவிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதில் 4 கட்டங்களே பூர்த்தியாகியுள்ளன. ஏனைய கட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் 100 8

# களவோடு தொடர்புடைய சந்தேகத்தில் 7 பேர் கைது; 16 பவுண் நகைகள் மீட்பு

வல்வெட்டித்துறை பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு உள்ளிட்ட சில இடங்களில் இடம்பெற்ற களவுச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் 16 பவுண் நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 4 பேர் மன்னாரைச் சேர்ந்த 2 பேர் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் அடங்குவர் என காங்கேசன்துறை 2

# சக கைதியால் தாக்கப்பட்ட மற்றொரு கைதி உயிரிழப்பு

## சிகிச்சை பயனின்றிப் போனது

களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

46வயதுடையகைதி ஒருவரே உயிரிழந்தவர் என்று பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

சிறைச்சாலையில் இவர் மீது சக கைதி ஒருவர் 2

# யாழ். பல்கலை மாணவி உயிரிழப்பில் சந்தேகம் எனப் பெற்றோர் முறையீடு

டெங்குக் காய்ச்சல் என யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவியின் இறப்பில் தமக்குச் சந்தேகம் இருப்பதால் அது தொடர்பில் முறைப்படி விசாரணை நடத்தும்படி மாணவியின் குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவி மருந்தின் ஒவ்வாமை காரணமாக உயிரிழந்தார் என்று 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்றால் 10 விடயங்களில் அவர் தயாராக வேண்டும் என்று கட்சியின் சார்பாக நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகக் கொ-ழும்பு ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன. அந்தப் 10 விடயங்களும் வருமாறு:

1. ஜனாதிபதித் தேர்தலில் 51% வாக்குகளைப்பெறுவதற்கு, ஏனைய அரசியல் கட்சிகள், குழுக்கள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் கூட்டுச் சேருவதற்கான வேலைத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

2. உலகின் பிற நாடுகளுடன் போட்டியிடக்கூடிய சர்வதேச அளவிலான கல்வியை நாட்டின் மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இலங்கையின் 17 பொதுப்பல்கலைக்கழகங்களையும் சர்வதேச தரவரிசையில் முதல் 1000 இடங்களுக்குள் கொண்டு வர, அந்தப் பல்கலைக்கழகங்களை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டம் முன்வைக்கப்படவேண்டும்..

3. உலகில் எந்த நாட்டிலும் பணிபுரியும் வகையில், இந்த நாட்டில் தொழில் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சர்வதேச அளவில் உயர்த்தப்பட வேண்டும்.

4. விவசாயிகளுக்கு வழங்கப்படும் உர மானியத்தை அதிகரித்து விவசாயத்தை மேம்படுத்தி, புதிய கலப்பின விதைகளை அறிமுகம் செய்வதன் மூலம் விளைச்சலைப் பெருக்கி, ஸ்மார்ட் விவசாயத்தை உருவாக்கும் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

5. கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் வறுமையை ஒழிக்கவும், சிறு மற்றும் நடுத்தர தொழில்களை மேம்படுத்தவும், அந்த பகுதிகளுக்கு பணம் புழங்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். கிராமம் மற்றும் நகர்ப்புற மக்களுக்கு பத்து லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

6. பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 7% ஆக உயர்த்தி பொருளாதாரத்தை விரிவுபடுத்த வேண்டும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். பொருட்களின் விலையும், வாழ்க்கைச் செலவும் மக்கள் தாங்கும் அளவிற்கு குறைக்கப்பட வேண்டும். தற்போது, விதிக்கப்பட்டுள்ள வற் வரியை குறைக்க வேண்டும்.

7. அரசுக்கு சொந்தமான வணிகங்கள் அல்லது அரசு சொத்துக்கள் தனியார் மயமாக் கப்படக்கூடாது. மேலும், தற்போது நஷ்டமடைந்து வரும் அரசு வணிகங்களை இலாபகரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படவேண்டும். அனைத்து பொதுச் சேவைகளுக்கும் ஒருங் கிணைந்த ICT தளம் நிறுவப்பட வேண்டும்.

8. மோசடி மற்றும் ஊழலைத் தடுக்க, அனைத்து அரசாங்க கொள்முதல் மற்றும் டெண்டர் நடைமுறைகளுக்கும், உலகின் பிற நாடுகளில் உள்ளதைப் போல, பொதுமக்கள் தகவல்களைப் பார்க்கக்கூடிய ஒரு வெளிப்படையான அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். ஊழல் மற்றும் ஊழல்களை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

9. சுற்றுலாத்துறையை மேம்படுத்த வருடத்திற்கு 50 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட வேண்டும். இலங்கை மீண்டும் அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு முகங்கொடுக்காத வகையில் டொலர்களை ஈட்டும் உத்திகளுடன் கூடிய திட்டவட்டமான புதிய வேலைத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

என்பனவே அந்த நிபந்தனைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மிக்கவைச் சுற்றி இவ்வாறு செய்திகள் பரப்பப்பட்டாலும், அவரே அடுத்த ஜனாதிபதி வேட்பா ளர் என்பதைப் போன்ற மாயை ஏற்ப டுத்தப்பட்டாலும் அவையெல்லாம் உண்மையாக வேண்டிய அவசியமில்லை, தமது நலன் கருதி கடைசி நேரத்தில் ராஜபக் ஷக்கள் ரணிலையே தொடர்ந்தும் ஜனாதிபதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் சிலர் கூறுகின்றனர். ராஜபக்ஷக்கள் குறித்து நன்கு அறிந்தவர்கள் அவர்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சம்பந்தன்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் நடந்த சந்திப்பில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சர்வதேசத்தை நாடுவேன் என்று இரா.சம்பந்தன் தெரிவித்த கருத்துத் தொடர்பிலேயே பெரமுனவின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

''ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்க் கட்சிகள் நடத்தும் சந்திப்புக்களின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனும் எல்லை மீறிப் பேசுகின்றனர். அரசமைப்பை மீறி எதனையும் செய்ய முடியாது என்பதை அரசியலில் முதிர்ச்சி பெற்ற அவர்கள் இருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக ஜனாதிபதியுடன் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் நடத்திய பேச்சின்போது 4 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே கலந்துகொண்டுள்ளனர். அதில் பங்கேற்ற கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜனாதிபதியை மிரட்டும் வகையில் பேசியுள்ளார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்றும், இல்லையேல் தாம் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் சம்பந்தன் எச்சரிக்கை விடுத்துள்ளார். அது ஒருபோதும் சாத்தியப்படாத விடயமாகும். சர்வதேசத்தை நம்பி ஏமாறாதீர்கள் என்று சம்பந்தன், சுமந்திரனிடம் சொல்லி வைக்கின்றேன்"- என்றார்

## சக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை நாகொட போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

அவரது சடலம் உடற் கூறாய்வுகளுக்காக களுத்துறை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

## தையிட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரையில் விசேட வழிபாடுகள் இடம்பெறுவதையொட்டி இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

## மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார். ஆனால் நாடாளுமன் றத்தில் கடந்த 11 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சேர்பெறுமதி (வற்) வரி சட்டமூலத்துக்கு அவர் ஆதரவாக வாக்களித்தார்.

ஒட்டுமொத்த மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வற் வரியை அதிகரிக்கும் தீர்மானத்துக்கு நாடாளுமன்றத்துக்குள் ஆதரவு வழங்கி விட்டு, நாட்டு மக்கள் மத்தியில் வரி குறைப்புக்கு நாங்கள் எதிர்ப்பு என ராஜபக்ஷர்கள் நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள்.

ராஜபக் ஷக்களின் வரி குறைப்பு கொள்கையை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தவுடன் சீனிக்கான வரியை 50 ரூபாவில் இருந்து 25 சதவீத குறைத்தார். இதன் பயனை நாட்டு மக்கள் எவரும் பெறவில்லை.

ராஜபக் ஷக்களின் செல்வந்த சகாக்கள் 1,600 கோடி ரூபா இலாபமடைந்தார்கள். பிணைமுறி மோசடியைவிட சீனிக்கான வரி குறைப்பு மோசடி பாரதூரமானது.

தேசியத்தையும், தேசிய உற்பத்திகளையும் பாதுகாப்பது தமது கட்சியின் கொள்கை என்று மஹிந்த ராஜபக் ஷ குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலேயர்களின் ஆட்சியில்கூட இலங்கையின் சுதேச உற்பத்திகள் இல்லாதொழிக்கப்படவில்லை. ஆனால் கோட்டபய ராஜபக் ஷ எவ்விதமான தூரநோக்கு சிந்தனையும் இல்லாமல் சேதன பசளை திட்டத்தை அறிமுகம் செய்து முழு விவசாயத்துறையையும் இல்லாதொழித்தார்.

பொருளாதார பாதிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று மஹிந்த ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷர்கள் குறிப்பிட முடியாது ஏனெனில் ராஜபக்ஷர்கள் பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர் நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பளித்துள்ளது. ஆகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக் ஷவை போன்று மஹிந்த ராஜபக் ஷவும் அமைதியாக விலகிக் கொள்ள வேண்டும்.

பொருளாதார முகாமைத்துவத்தில் ராஜபக் ஷகள் எடுத்த மூர்க்கத்தனமான தீர்மானங்களினால் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் மாத்திரம் ஒவ்வொரு தனிநபரும் ஏதாவதொரு வழிமுறையில் ஒரு இலட்சம் ரூபா வருமானத்தை இழந்துள்ளனர். அத்துடன் ஒரு இலட்சம் ரூபா பொருள் மற்றும் சேவைத்துறையில் வரியாக செலுத்தியுள்ளனர். இதற்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ பயணித்த பாதையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணிக்கிறார். வரி செலுத்தாமல் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக் கப்படவில்லை.

மதுவரித் திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத்திணைக்களம் சுமார் 1000 பில்லியன் ரூபா வரை வரி வருமானத்தை அறவிடவில்லை. முறையாக வரி அறவிட்டால் மக்களை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய தேவை ஏற்படாது - என்றார்.

## வடக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்த வருடம் நவீன மயப் படுத்தப்பட்ட மேம்பாட்டு திட்டத்தின் கீழ், வடக்கு விவசாயிகளுக்காக எடுத்துவரப்பட்ட சுமார் 21,000 கிலோ உருளைக் கிழங்கு பயன்படுத்த முடியாத அளவிற்கு நோய்த் தொற்றுக்கு உள்ளானது தொடர்பாகவும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில், சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்கள் நடைபெறாது எனவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

## களவோடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். கைதுசெய்யப் பட்டவர்கள் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

டிசெம்பர் 20 வல்வெட்டித் துறையில் நடந்த களவுச்சம்பவத்தில் ஐந்தரை இலட்சம் ரூபாய் பணமும் 16 பவுண் நகைகளும் களவுபோயி ருந்தன. களவில் ஈடுபட்ட பிரதான சந்தேகநபர் 19 வயதான போதைக்கு அடிமையான நபர் என்கின்றனர் பொலிஸார். அவரும் திருடப்பட்ட நகையை அடகு வைத்தவரும் நகைகளை உடமையில் வைத்திருந்த பெண் ஒருவரும் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்த பிரிவினர் ஆவர். ஆகவே எமது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார அடைவுகள், சகோதர இனத்தவர்கள் அடைந்துள்ள, இலக்குகளைவிடக் குறைவாக இருப்பது ஆச்சரியம் அல்ல. ஆனால், இந்த இருபது வருடங்களில் ஏனையோர் மரதன் ஓடும்போது நாம் நூறு மீட்டர் ஓடி வேகமாக பல முன்னேற்றங்களைக் கண்டுள் ளோம். எனினும் இன்னமும் நாம் போக வேண்டிய தூரம் கணிசமாக இருக்கிறது.

நாம் அடையவேண்டிய வளர்ச்சியை அடையாமல் குறைவளர்ச்சியில் நிற்கிறோம். மலையக தமிழரின் குறை வளர்ச்சிக்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் கூட்டு பொறுப்பேற்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வரும்போதெல்லாம், 1948இல் இலங்கையின் அந்நிய செலவாணி தொகை ஆசியாவிலேயே ஜப்பானுக்கு அடுத்தபடியாக அதிகமாக இருந்தது என்று பெருமையாக கூறுவார். அது உண்மை. அதன் பின்னுள்ள கசப்பான உண்மை என்ன? அந்த அதிக தொகை அந்நிய செலவாணியை இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தி பெற்று தந்தது நமது மக்களின் தேயிலை, இறப்பர் போன்ற பெருந்தோட்ட உழைப்பினால் கிடைத்த ஏற்றுமதி வருமானம் ஆகும். ஆனால், இதற்காக 1948களிலேயே முதல் சுதந்திர இலங்கை அரசு எமக்கு செய்த கைம்மாறு என்ன? எமது குடியுரிமையையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடற்ற மக்கள் ஆக்கியதே.

1964இல் எம்மை கலந்தா லோசித்து எமது உடன்பாடுகளை பெறாமலேயே இந்திய அரசு, எம்மில் பெரும்பான்மையோரை நாடுகடத்த உடன்பாடு தெரிவித்தது. அன்று ஏற்படுத்தப்பட சிறிமா - -சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக எமது மக்கள் கால்நடைகள் போல் நாடு கடத்தப்பட்டு, இங்கே நாம் அரசியல் ரீதியாக பலவீனபடுத்தப்பட்டோம். இந்த ஒப்பந்தம் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம்.

1972 வரை நாம் குடியரசு ஆகவில்லை. அதுவரை பிரிட்டிஷ் மகாராணியார்தான் எமது தேசத் தலைவராக இருந்தார். நாம் டொமினியன் சிலோன் என்ற நாடாக இருந்தோம். எம்மை 200 வருடங்களுக்கு முன்னர் இங்கே கொண்டு வந்தவர்களும் பிரிட்டிஷார்தான். 1948இல் எமது குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்ட போதும், 196ஈல் நாடு கடத்தல் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் பிரிட்டிஷ் மகாராணியார் கண்ணை மூடிக்கொண்டு இருந்தார்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....




# யாழில் போதைப்பொருளுடன் கைதான பெண்ணிடம் மீட்கப்பட்டுள்ள கைபேசிகளை அடையாளம் காட்டுக

## பொலிஸார் கோரிக்கை

யாழில்போதைப்பொருளுடன் கைதான பெண்ணிடம் இருந்து மீட்கப்பட்ட தொலைபேசிகளை அடையாளம் காட்டுமாறு நெல்லியடிபொலிஸார்கோரியுள்ளனர்.

துன்னாலைபகுதியைசேர்ந்த பெண்ணொருவர் போதைப் பொருளுடன் கைதான போது, அவரிடம் இருந்து 19 கையடக்க தொலைபேசிகளை பொலிஸார் மீட்டு இருந்தனர்.குறித்த தொலைபேசிகள் களவாடப்பட்ட தொலைபேசிகளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கும் நிலையில் , அண்மைய நாள்களில் தொலைபேசிகளை களவு கொடுத்தோர், நெல்லியடிபொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து, தொலைபேசிகளை பார்வையிட முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)



# தாமரைக் கோபுரத்தை பார்வையிட இதுவரை 14 லட்சம் பேர் வருகை

தாமரைகோபுரத்தைப்பார்வையிடவருவோரின் தொகை அதிகரித்துள்ளதாகத் தாமரைக் கோபுர முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தாமரைக் கோபுரம் பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டதில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் 14 லட்சம் பார்வையாளர்கள் பார்வையிடுவதற்கு வருகை தந்துள்ளனர்.

அதில், வெளிநாட்டில் இருந்து இதுவரையில் 42 ஆயிரத்து 297 பேர் கோபுரத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை தாமரைக் கோபுரத்திற்கு 7,522 பார்வையாளர்கள் வருகை தந்துள்ளனர். அதில்உள்ளூரிலிருந்து7,285பார்வையாளர்களும், வெளிநாட்டிலிருந்து 237 பார்வையாளர்களும் கோபுரத்தைப் பார்வையிட்டுள்ளனர். (05)

# 4 வலம்புரிச் சங்குகளுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார் சாந்திபுரம் பகுதியில் நான்கு வலம்புரி சங்குகளை விற்பனை செய்யும் நோக்கில் வைத்திருந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் மன்னார் பொலிஸ் விசேட குழுவினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வலம்புரிச் சங்கு வைத்துள்ளனர் எனப்பொலிஸாருக்குக்கிடைத்ததகவலுக்குஅமைய ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் மன்னாரைச் சேர்ந்த 60 வயதுடையவராவார். (05)

# இணைய மோசடிகள் யாழில் அதிகரிப்பு

## பல லட்ச ரூபாக்களை இழந்தவர்கள் முறைப்பாடு

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்டலாம் என ஆசை காட்டி பல லட்ச ரூபா பணம் யாழ்ப்பாணத்தில் இணைய மோசடியாளர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த இருவர் 30 லட்சம் மற்றும் 16 லட்சம் ரூபாவை இழந்த நிலையில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான சமூக வலைத்தளங்கள் ஊடாக மோசடிக்காரர்கள் விளம்பரம் செய்கின்றனர்.

அதனை நம்பி அந்த இணைப்பின் ஊடாக உட்செல்வோருக்கு முதலில் சிறு தொகை பணத்தை அவர்கள் சொல்லும் கணக்குக்கு இணையம் ஊடாக செலுத்தச் சொல்லுவார்கள்.

முதலில் சிறு தொகை பணத்தைச் செலுத்தச் சொல்வதானால், இவர்கள் எதுவும் யோசிக்காமல் பணத்தைச் செலுத்தி விடுவார்கள். பணம் செலுத்தப்பட்டதும், அதொரு முதலீடு எனவும், அதனால் வந்த வருமானம் என ஒரு தொகையை இவர்களுக்கு வைப்பு செய்து ஆசையை மேலும் தூண்டுவார்கள்.

இவ்வாறாக பெரும் தொகை பணத்தை வைப்பிலட வைத்த பின்னர், அந்த பணத்துடன் அவர்கள் காணாமல் போய் விடுவார்கள். அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் இவர்களுக்குத் தெரியவரும்.

ஏமாற்றப்பட்ட விடயம்அறிந்தபின்னர்பொலிஸ் நிலையங்களில்முறைப்பாடுகள்செய்வார்கள். அதில் யாருக்குஎதிராகமுறைப்பாடுசெய்வது, அவர்களின் விவரங்கள் என எதுவும் இருக்காது. அதனால் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பதில் சவால்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்வாறான இணைய மோசடியாளர்களிடம்சிக்காதுமக்கள்தான்விழிப்புடன்இருக்க வேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ரூ. 70 லட்சம் பெறுமதியான பணம், பொருள்கள் தொழிலதிபரின் வீடு உடைத்து உடப்பில் திருட்டு



உடப்பு, புனவிட்டியவில் உள்ள பிரபல தேங்காய் மற்றும்இறால்பண்ணை உரிமையாளரான தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் திங் கட்கிழமை அதிகாலை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு குடும்பத்துடன் வெளியே சென்றிருந்தவர் திங்கட்கிழமை காலை வீடு திரும்பியபோது, தங்கம் உள்ளிட்ட பொருள்கள் திருடப்பட்டிருப்பதைக் கண்டதையடுத்து இது தொடர்பில்பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியானபொருள்கள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளமைபொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தத் திருட்டில் ஈடுபட்ட நபர்கள் ஜன்னலை உடைத்து வீட்டுக்குள்நுழைந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை உடப்பு பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (05)

# ஐரோப்பாவில் சட்டவிரோதமாக குடியேறமுயன்ற 14 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்

கடல் மார்க்கமாக சட்ட விரோதமாகக் ஐரோப்பாவில்குடியேறமுயற்சித்தபோதுகைதுசெய்யப்பட்டுரீயூனியன்தீவில்தங்க வைக்கப்பட்டிருந்த 14 இலங்கையர்கள் பிரான்ஸின் ரீயூனியன் தீவின் அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சட்டவிரோதமாகப் படகுகளில் பயணித்தபோதே தடுத்து நிறுத்தப்பட்டு கரைக்குக் கொண்டுசெல்லப்பட்டு விமானம் மூலம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் பேருவளை, சிலாபம் மற்றும் களுவாஞ்சிக்குடி பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும் 21 முதல் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

# உதவிக்கரம் நீட்டிய இராணுவத்தினர்!

நத்தார் தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் மற்றும் இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (05)

# களுவாஞ்சிக்குடியில் விபத்து; கணவன், மனைவி காயம்

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ்பிரிவுக்குட்பட்டஒந்தாச்சிமடம் பிரதான வீதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் கணவனும், மனைவியும் காயமடைந்துள்ளனர்.

ஓட்டமாவடி பகுதியிலிருந்து கல்முனை நோக்கி முச்சக்கர வண்டியில் சென்ற குடும்பத்தினர் ஒந்தாச்சிமடம் பகுதியில் வைத்து படி ரக வாகனம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவ்விபத்தில்ஓட்டோவைசெலுத்திச் சென்ற கணவனும் ஓட்டோவில் பயணித்த மனைவியும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வவுனியாவில் கழிவுகள் கொட்டும் இடமாகிப்போன பொதுச் சந்தை

வவுனியா பூந்தோட்டம் பொதுச் சந்தையில் கோழிக்கழிவுகளை சிலர் கொட்டுவதால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளது.

வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பூந்தோட்டம் பொதுச்சந்தை கடந்த சிலமாதங்களாக இயங்காதநிலையில் உரிய பராமரிப்பின்றி உள்ளது.

இந்நிலையில் அண்மைய நாள்களாக பொதுச்சந்தை வளாகத்தில் கோழி இறைச்சியின் கழிவுகளைக் குறித்த சிலர் வீசிச்செல்கின்றனர். இதனால் அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடானநிலைமைஉருவாகியுள்ளது.

வீசப்படும்கழிவுகளைமிருகங்கள் பறவைகள் காவிச்செல்வதால் அந்தபகுதியில் துர்நாற்றம் வீசும் நிலையும்காணப்படுகின்றது. இதனால் அந்தபகுதியைப்பயன்படுத்தும்பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவேகுறித்தவிடயம்தொடர்பாக வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவுகளை வீசுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுப்பதுடன் சந்தையைப் புனரமைத்து மக்கள் பாவனைக்காகக் கையளிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூந்தோட்டம் பொதுச்சந்தை நீண்ட காலமாக இயங்காத நிலையில் அதற்கு அண்மையில் பல தனியார் இறைச்சி விற்பனை நிலையங்கள் செயற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# அதிவேக நெடுஞ்சாலை வருமானம் அதிகரிப்பு

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நாட்டின் அதிவேக வீதிகளை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக வழமையை விட 40 சதவீத வருமானஅதிகரிப்பை வீதி அபிவிருத்தி அதிகார சபை பதிவு செய்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் எல்.வி.எஸ். வீரகோன் தெரிவித்துள்ளார். (05)

# சுற்றுலா பயணிகள் வருகை நுவரெலியாவில் அதிகரிப்பு

## அதனால் போக்குவரத்து நெரிசல்

வார இறுதியில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாள்களில் வெளி மாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாபயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருகின்றார்கள்.

குறிப்பாக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையிலும், நத்தார் பண்டிகை விடுமுறை மற்றும் புத்தாண்டு விடுமுறை எனத் தொடர்கிறது. இதனால் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடுமுறையைக் கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாபிரயாணிகளின் வருகை காரணமாக நுவரெலியா விக்டோரியா பூங்காவிலும் கிரகறி பூங்காவிலும் கிறகறி வாவி கரையிலும், உலக முடிவு, சீத்தாஎலிய கோவில், வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையம் போன்ற பகுதிகளிலும் சுற்றுலா பயணிகள் கூட்ட கூட்டமாகக் குவிந்து காணப்படுகின்றன. அத்தோடு நுவரெலியா கிறகரி வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ள காணிவேல்களியாட்டநிகழ்வுகளிலும், மட்டக்குதிரை சவாரி செய்யும் இடத்திலும் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் குவிந்து காணப்படுகின்றனர்.

இவ்வாறு சுற்றுலா பயணிகள் விடுமுறை நாள்களில் நுவரெலியாவிற்கு வருகை தருவதால் வாகன தரிப்பிடங்களிலும் பிராதான வீதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

இந்த நாள்களில் நுவரெலியாவுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கு காலநிலை பொருத்தமானதாக உள்ளமையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் சுற்றுலா இடங்களைப் பார்த்து பொழுதுபோக்கி வருகின்றனர். (05)

# காணாமல் போயிருந்த இரு மாணவிகள் மீட்பு

சுமார் மூன்று மாதங்களாகக் காணாமல் போயிருந்த குருணாகல் கலகெதர மற்றும் மாவத்தகம பகுதிகளைச் சேர்ந்த இரு மாணவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் திங்கட்கிழமை காலை மாத்தறை உயன்வத்தையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒக்ரேபர் மாதம் முதலாம் திகதி 18 மற்றும் 19 வயதுடைய குறித்த இரண்டு மாணவிகளும் மேலதிக வகுப்புக்கு செல்வதாகக் கூறி வீடுகளிலிருந்து வெளியேறியதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறு அவர்கள் சென்றவர்கள் அன்றைய தினம் வீடு திரும்பாததால் அவர்களது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுஅளித்தனர்.

அதற்கமைய பொலிஸார் முன்னெடுத்த விசாரணையில் மாத்தறை, உயன்வத்தை பகுதியில் தங்கும் விடுதியில் இருந்து பணிபுரியும் கடையொன்றிற்குச் சென்றுகொண்டிருந்த இரு மாணவிகளும் திங்கட்கிழமை காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவத்தகம மற்றும் கலகெதர பொலிஸ்நிலையத்தினூடாக இரண்டு மாணவிகளும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் பொது வேட்பாளர் சாத்தியமா?

அடுத்த ஆண்டு அரசுத் தலைவர் தேர்தல் என் பதையொட்டி தமிழர் தரப்பில் இருந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாகஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூ–ட்டணியின் சார்பில் இந்த யோசனை முன்வைக்கப்படுகின்றது.

ஜனநாயகக்கூட்டணியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் நேற்றும்கூட செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்திருக்கிறார்.

”நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படவிருக்கிற ஒரு சமுதாயமாக இருக்க விரும்பவில்லை. ஆகவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றோம் ஒட்டு மொத்தமாக தமிழர் தரப்புக்கள் சேர்ந்து ஒரு பொது வேட்ப்பாளரை நிறுத்தவேண்டும்.

நிச்சயமாக சிங்கள தரப்பிலிருந்து வரக்கூடிய தரப்பாக இருந்தாலும் ஏறத்தாழ ஐந்து ஆறு இலட்சம் தமிழ் வாக்குகள் அவர்களுக்கு தேவைப்படுமிடத்து எங்களுடன் ஆக்கபூர்வமான பேச்சுக்கு வரவேண்டிய காலம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது. என்று நாங்கள் நம்புகின்றோம்.

அந்த வகையில் வகையில் நாங்கள் ஏற்கனவே இது தொடர்பாக ஈபிஆர்எல்எவ், புளொட், டெலோ, தமிழ் தேசிய கட்சி, ஜனநாயகப்போராளிகள், தமிழ் மக்கள் கூட்டணி இணைந்து ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கு இணங்கி இருக்கின்றன.

இந்த சூழ்நிலையில் தமிழ் அரசுக் கட்சியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் இதற்குச் சம்மதித்து வருவார்களாக இருந்தால் நிச்சயமாக யார் ஒரு பொது வேட்ப்பாளர் என்ற விடயத்தை நாங்கள் ஆராய்ந்து சரியான ஒரு வேட்பாளரை தெரிவு செய்யக்கூடியதாக இருக்கும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கூட்டணி கூறுவதைப் போன்று ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது சாத்தியமானதுதானா? அதனால் தமிழ் இனத்திற்குப் பயன் ஏதும் உண்டா? அப்படி தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும்போது தமிழர்களின் பேரம் பேசும் சக்தி அதிகரிக்குமா?

பொது வேட்பாளரை நிறுத்துவதில் ஜனாயகக் கூட்டணி, தமிழ் அரசுக் கட்சி மற்றும் காங்கிரஸ் ஆகியன ஒன்றிணைவதற்கான வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவானதே. ஒருவேளை தமிழ் அரசுக் கட்சிகூட இந்த யோசனைக்கு ஒத்து வந்தா–லும் காங்கிரஸ் ஒத்து வராது. இவர்கள் பொது வேட்பாளர் என்றால் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று கூறிக்கொண்டு தனி வழியில் ஏனைய தமிழ்க் கட்சிகளில் இருந்து தன்னைத் தனித்துவமாகக் காட்டுவதிலேயே காங்கிரஸ் குறியாக நிற்கும். எனவே முதலில் இது விடயத்தில் தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமையைச் சாத்தியப்படுத்துவதே முயற்கொம்புதான்.

ஒருவேளை எல்லாக் கட்சிகளும் இணைந்து ஒரு தமிழ் பொது வேட்பாளரை நியமிக்க –முன்வந்தால்கூட, அதைப் பார்த்து சிங்களப் பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் தமிழர்களுடன் பேரம் பேச முன்வருவார்கள் என்று நினைப்பது அபத்தம். தமிழர்களின் வாக்குகள் இல்லாமல் வெற்றி சாத்தியம் என்பதை கோட்டாபயவே நிரூபித்துவிட்டார். சிறுபான்மை வாக்குகள் ஆதரவில் தங்கியிருந்து வெற்றியைப் பெறமுடியாது என்பதை சஜித் கடந்த தேர்தலில் உணர்ந்துள்ளார். அதனால் சிங்கள வாக்குகளைக் கவர்வதிலேயே அவர் குறியாக இருக்கிறார். ஜேவிபி தமிழர்களுடன் அத்தகைய பேரம் பேசல்களுக்கு முன்வராது. தமது கொள்கையை ஏற்று தமிழர்கள் தம் பின்னால் வரவேண்டும் என்பது மட்டுமே அதன் எதிர்பார்ப்பு. வெற்றி வாய்ப்புக்கு முழுமையாக ராஜபக் ஷக்களையும் அவர்களது மொட்டுக் கட்சியையும் சார்ந்திருக்கவேண்டிய நிலையில் தனக்கு ஆபத்தான பேரம் பேசல்களுக்கு ரணிலும் முன்வரும் நிலமை இல்லை.

அப்படியிருக்கும்போது பொது வேட்பாளரால் தமிழர்களின் பேரம் பேசல் சக்தி அதிகரிக்கும் என்று நினைப்பது இப்போதைய நிலையில் சாத்தியமேயற்றது. ஒருவேளை தேர்தல் நெருங்கும்போது, யாராவது ஒரு வேட்பாளர் வெற்றியின் விளிம்புவரை வரும் சாத்தியம் இருந்தால் அந்தத் தருணத்தில் அவர் தமிழர்களுடன் பேரம் பேச முன்வரக்கூடும். அப்படி வெற்றியின் விளிம்பில் இருக்கும் வேட்பாளர் என்று இதுவரையில் எவரும் இல்லை என்பதையே மக்கள் கருத்துக் கணிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. அப்படி எந்தவொரு வேட்பாளருக்கும் 51 சதவீத பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால் இரண்டாவது விருப்பு வாக்கின் அடிப்படையில் தமிழர்களின் வாக்குகள் அரசுத் தலைவரைத் தீர்மானிக்கும் என்பதெல்லாம் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் யதார்த்தத்தில் சாத்தியமானது அல்ல.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இதே யோசனையை முன்வைத்து சிவாஜிலிங்கம் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டபோது அவரை சிங்களத்தின் ஏவலாளி என்று வசைபாடியவர்கள் இப்போது அதே யோசனையை தாங்கள் கையிலெடுத்திருப்பது ஏன் என்பதை மக்களிடம் நியாயப்படுத்துவது என்பதும் இலகுவான காரியமல்ல. எனவே இந்த யோசனை குறித்து ஆழமான அரசியல் ஆய்வுகள் தேவை.

# சஜித்-டலஸ் கூட்டணியை பார்த்து அஞ்சும் ரணில், ராஜபக்ஷக்கள்

உபுல்யோசப்பெர்னான்டோ



1964ஆம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அப்போதைய ஐ.தே.க. மற்றும் எதிர்க்கட்சித் தலைவரான டட்லி சேனநாயக்க, நாடாளு மன்ற அவைத் தலைவர் சி.பி.டி.சில்வாவுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தார். சிறீமாவோவின் ஆட்சியைக் கவிழ்த்த பின்னர் சி.பி. டி சில்வாவைப் பிரதமராகக் கொண்ட ஆட்சி அமையும் என்பதுதான் அந்தத் திட்டம்.

அரசு கவிழ்ந்தது. டட்லி அமோக வெற்றி பெற்றார். பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடந்த முதல் கட்சித் தலைமைக் கூட்டத்தில் அவர் சி.பி.யுடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தம் குறித்துத் தெரியவந்தது.

'சி.பியே அடுத்த பிரதமர்...' என்றார் டட்லி. ஐ.தே.கவின் மூத்தவர்கள் ஆச்சரியமடைந்தது மட்டுமல்ல சோர்ந்தும் போனார்கள்.

''நான் இந்த முடிவை எடுக்கவில்லை என்றால் நாங்கள்



இன்னும் எதிர்க்கட்சியிலேயே இருந்திருப்போம்” என்று டட்லி கூறினார். அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்த சி.பி. எழுந்தார், ''ஒப்பந்தத்தைக் கைவிட்டுவிடுவோம், முடிந்தால் நான் வகித்து வந்த அமைச்சை எனக்குத் திருப்பிக் கொடுங்கள். அது போதும்...” என்று கூறினார்.

டட்லியின் கண்களில் கண்ணீர் வந்தது.

1988 ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் சிறீமாவோ பண்டாரநாயக்காவை ஆதரிப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஒரு நிபந்தனையை முன்வைத்தார். அதாவது, மத்திய கொழும்பில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை நிறுத்தக்கூடாது, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிறுத்தும் வேட்பாளரை சுதந்திரக் கட்சி ஆதரிக்கவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை.

பௌசி, ஹலீம் இாக், அலவி மௌலானா மற்றும் சிறீ-லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்கள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். அதனால் சிறீமாவோ அஷ்ரப்பை கைவிட்டுவிட்டார். அஷ்ரப் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளரான பிரேமதாச பக்கம் சென்றுவிட்டார். ஹெலிகொப்டரில் அவர் கிழக்கு மாகாணத்திற்கு சென்றார். பிரேமதாசவின் வெற்றிக்கு கிழக்கில் இருந்து அஷ்ரப் பெற்ற முஸ்லிம் வாக்குகளும் ஒரு காரணம். அந்தத் தேர்தலில் சிறீமாவோ தோற்றார்.

இந்தக் கதை சந்திரிக்காவுக்குத் தெரியும். 1994 பொதுத் தேர்தலுக்காக முஸ்லிம் காங்கிரஸுடன் உடன்படிக்கை செய்துகொண்டபோது அது பற்றி அவர் யாரிடமும் சொல்லவில்லை.



அவருக்கும் அஷ்ரஃபுக்கும் மட்டுமே அந்த ஒப்பந்தம் பற்றித் தெரியும். 17 வருடங்களின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அந்தத் தேர்தலில் வெற்றிபெற்றது.

2008ஆம் ஆண்டு மகிந்தவின் ஆட்சியில் வரவு செலவுத்திட்டத்தை தோற்கடிக்க, மகிந்த தரப்பு நாடாளு மன்ற உறுப்பினர்களான மங்கள மற்றும் சிறீபதியுடன் ரணில் இரகசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். மங்களவிற்கு பிரதியமைச்சர் பதவியை வழங்கு-வதாக ரணில் உறுதியளித்தார்.



இந்த ஒப்பந்தம் குறித்து கட்சியின் செயலாளர் திஸ்ஸவுக்குக்கூடத் தெரியாது.

2015 சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபாலவை ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் முன்மொழிந்தார். பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னரே கட்சியின் செயற்குழுவில் இதனை அவர் முன்மொழிந்தார்.

தேர்தல் வெற்றிக்காக இப்படித்தான் கூட்டணி அமைக்கப்படுகிறது. அப்படி கூட்டணி வைக்க முடியாவிட்டால், சாகும் வரை எதிர்க்கட்சியில்தான் இருக்க முடியும். கட்சி அங்கீகாரத்துடன் சஜித் எப்படிக் கூட்டணி அமைக்கப் போகிறார் என்பதை பார்க்கும்போது இந்த பழைய கதைகள்தான் நினைவுக்கு வருகின்றன. சஜித் தலைமையிலான கூட்டணி சுதந்திர தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து வரலாற்று சிறப்பு மிக்க கூட்டணியை உருவாக்கவுள்ளது.

அது ஏன்?

மக்கள் கிளர்ச்சியால் பொது ஜன பெரமுனவின் ஆட்சி ஆட்டம் கண்டு, மகிந்த பிரதமர் பதவியை விட்டு ஓடியபோது ரணில் இடையில் புகுந்து பிரதமர் பதவியைப் பெறாமல் இருந்திருந்தால், பொது ஜன பெரமுனவில் இருந்து பிரிந்த சுதந்திர தேசிய பேரவையும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்த கூட்டணியால் இன்று நாடு ஆளப்பட்டிருக்கும். இந்தக் கூட்டணிக்கான பேச்சுத் தொடங்கப்பட்டதை அடுத்துப் பயந்துபோன ராஜபக்சேகளும் ரணிலும் இணைந்து ரணிலைப் பிரதமராக்கி ஆட்சியைத் தக்க வைத்தனர்.

ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய விலகி ஓடிய பின்னர் மீண்டும் சுந்திர தேசி யக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய மக் கள் சக்தி கூட்டணி முன்னிலைக்கு வந்தது. பேச்சு வெற்றி பெற்றது. இடைக்கால ஆட்சிக்கு சபாநாயகரை ஜனாதிபதியாக்க அனைவரும் ஒப்புக்கொண்டனர். ஜேவிபியும் ஒப்புக்கொண்டது. இதனால் ராஜபக்சே மற்றும் ரணில் தரப்புக்கள் கடுமையாகப் பயந்தன. பிரதமர் ரணிலைத் தற்காலிக ஜனாதிபதியாக மாற்ற ராஜபக்சே முடிவு செய்தார். மறுபுறத்தில் சஜித் கூட்டணியும் ஆட்டத்தில் இறங்கியது. டலஸை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த சஜித் சம்மதித்தார். ஆனால் ராஜபக்சக்கள் டல்லஸைத் தோற்கடித்தனர். அதையடுத்து சுதந்திர தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சியாக அமர்ந்தது.

அங்கிருந்து ஐக்கிய மக்கள் சக்தியும் சுதந்திர தேசிய கூட்டமைப்பும் ஒன்றிணைந்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கான பேச்சுக்களைத் தொடங்கின. இந்தப் பேச்சுக்களைச் சீர்குலைக்க ரணிலும் ராஜபக்சே குடும்பத்தினரும் தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தனர். இதற்கு அவர்கள் இலங்கையின் முக்கியமான ஊடகங்களைப் பயன்படுத்தினர்.

'சுதந்திர தேசிய முன்னணி உடன் கூட்டணி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி சர்ச்சை'

'டலாஸ் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி இல்லை...'

'ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி வைக்க மாட்டோம். சுதந்திர தேசிய கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் கூறுகிறார்.'

'கூட்டணிக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த தலைவர்கள் எதிர்ப்பு..'

'டலஸ் துணைத் தலைமையைக் கேட்கிறார்&'

'நான்கு பேர் மட்டுமே சுந்திர தேசியக் கூட்டமைப்புடன் உடன் இணைவார்கள்...'

(9ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir



# எம்.ஜி.ஆர். நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு

தமிழகமுதலமைச்ச்ஸ்எம்.ஜி.ஆரின் 36 ஆவது நினைவுதினம் வவுனியா வில் உள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது எம்.ஜி.ஆரின் திரு வுருவப்படத்திற்கு தீபமேற்றி, மலர் அஞ்சலிசெலுத்தப்பட்டதுடன்,நினைவுப் பேருரையும் இடம்பெற்றிருந்தது.

வவுனியா எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வர்த்தக நலன்புரி சங்கத்தின் தலைவர் கோ. சிறீஸ்கந்ததராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சட்டத்தரணி தயாபரன், நற்பணி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# யாழ்ப்பாண இளைஞர்கள் மூவர் புனர்வாழ்வுக்கு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள்களுடன் கைதானவர்களில் மூன்று இளைஞர்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப் பப்பட்டுள்ளனர்.

மாதகல், இளவாலை மற்றும் காட்டுப்புலம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மூன்று இளைஞர்களைப் போதைப்பொருள்களுடன், இளவாலை பொலிஸார் கைது செய்திருந்த நிலையில் , விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதி வான் நீதிமன்றில் முற்படுத்தி, நீதி மன்ற அனுமதியுடன் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (05)

# கைதிகளின் தண்டனை காலத்தில் மாற்றமாம்!

## அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் அமுல் படுத்தப்படும் நடவடிக்கையால் சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள்பாவனையா ளர்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில் –

’போதைப்பொருளை கட் டுப்படுத்தும் நோக்கில் பொலிஸா ரால் இன்று முன்னெடுக்கப்படும் நடவடிக்கையால் சிறைச்சா லைகளில் கைதிகளின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது.

எவ்வாறாயினும் இது நீதி மன்ற நடவடிக்கையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதற்காக சில சுற்று நிருபங்களும் வெளி யிடப்பட்டுள்ளன. அதன்படி சிறையில் இருக்கும் கைதிகளின் தண்டனைக் காலத்தையும் விளக்கமறியல் கைதிகளின் தண் டனை காலத் தையும் கருத் தில் கொள்ள வேண்டியுள்ளது. – என அவர்மேலும்தெரிவித்தாஜர். (05)

# கடல் கடந்து சொத்துக்கள் இல்லை எனில் அமைச்சர் டிரான் சட்டத்தை நாடலாம்

## சம்பிக்க சாட்டை

கடல் கடந்த சொத்துக்கள் அவரிடம் இல்லை என்றால் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சட்ட நடவ டிக்கையை நாடலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பண்டோரா பேப்பர்ஸ் தரவுக் களஞ்சியத்தில் கடல்கடந்த சொத்துக்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்ட முதல் இலங்கை அமைச்சர் டிரான் அலஸ் என சர்வதேச புலனாய்வுப் பத்திரிகையா ளர்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், பண்டோரா பேப்பர்ஸ் மூலம் அடையாளம் காணப்பட்ட கடல்கடந்த சொத்துக்கள் இருப்பதாக வெளியான குறித்த அறிக்கை பொய் அது தவறு என்றால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உரிய விசாரணை நடத்த வேண்டும்.

இதேநேரம் குறுகிய காலத்திற்குள் முழு வரி நடைமுறையையும் டிஜிற்றல் மயமாக்கியிருந்தால் வருமானத்தை 50 வீதத்தால் அதிகரித்திருக்க முடியும், 900 பில்லியனுக்கும் அதிகமான தொகையை செலுத்தாத வரிகள், அபராதம் மற்றும் வட்டியை திரும்பப் பெற அரசாங்கம் தவறிவிட்டது.

பாதாள உலகத்தை குறிவைத்து, குறிப்பாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் கும்பலை இலக்கு வைத்து, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மேற்கொண்டுள்ள அதியுயர் நடவடிக்கை பொலிஸ் மா அதிபர் பதவியை பெற்றுக்கொள்ளும் ஒரு பிரசாரமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Paneer & Ghee - 390/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்புக்கும் மாநகர சபையின் கட்டண அறவீடா?

## வணிகர் கழகம் கவலை' ஆளுநரிடம் முறையீடு

யாழ். மாநகர சபை அடாவடியாகச் செயற்படுவதாக யாழ். வணிகர் கழகம் குற்றச்சாட்டியுள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று இடம்பெறவுள்ள மார்கழி இசை நிகழ்வில் ஓர் அங்கமாக வட மாகாணத்தில் உள்ள உற்பத்தியாளர்களின் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாண மாநகரசபையினரால்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுகின்றஒவ்வொரு கடைகளுக்கும் நாளொன்றுக்கு தலா 1000 ரூபா வரி கட்ட வேண்டும் என யாழ்ப்பாண மாநகர சபையால் அறிவித்தல் கடிதமொன்றுஅனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய யாழ். வணிகர் கழகம் இந்த விடயம் தொடர்பில் வட மாகாண ஆளு நருக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளனர்.

குறித்த கடிதத்தில் 'வட மாகாணத்தில் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தோடு உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி இலவசமாக முன்னெடுக்கப்படுகின்றநிலையில் யாழ்ப்பாண மாநகர சபை அடாவடியாக செயற்படுகின்றது. - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# நத்தாரைக் கொண்டாட முடியாததால் உயிரை மாய்க்க முயன்ற குடும்பஸ்தர்

நத்தாரைக் கொண்டாட பணம் இல்லாததால் 5 பிள்ளைகளின் தந்தையொருவர் தனது உயிரை மாய்க்க முயற்சி செய்த சம்பவம் மட்டக்களப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி நபர் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் கல்லடி பாலத்தில் இருந்து குதித்துள்ள நிலையில் பொதுமக்களால் காப்பாற்றப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்கொலைக்கு முயற்சி செய்த குற்றச் சாட்டில் குறித்த நபரைக் கைதுசெய்த பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# மீகஹவத்தையில் கசிப்பு காய்ச்சிய நபர் கைது

மீகஹவத்தை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு காய்ச்சிய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை அப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரின் வீட்டை சோதனையிட்ட போது வீட்டின் குளியலறையில் இருபத்தி நான்கு லட்சத்து பதினேழாயிரம் மில்லிலீற்றர் கோடா, 06 கோடா பீப்பாய்கள், எரிவாயு அடுப்பு, எரிவாயு தாங்கி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இங்கு தயாரிக்கப்படும் கசிப்பு வகைகள் கிரிபத்கொடை மற்றும் பியகம பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மஹர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)





# மலையகத்தில் களைகட்டிய கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

கிறிஸ்மஸ் பண்டிகை தினமான திங்கட்கிழமை மலையகத்திலுள்ள கிறிஸ்தவர்கள் வெகுவிமர்சையாக கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடினர். அந்தவகையில் மலையகத்தில் உள்ள கிறிஸ்தவ தேவலாயங்களில் விசேட ஆராதனைகள் இயேசு, கலை விழாகள் என இடம்பெற்றன.

ஹற்றன் நகரத்தில் உள்ள திருச்சிலுவை தேவலாயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று அருட் தந்தை நியூமன் பீரிஸால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதில் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதம் சரிவரும் என்ற நம்பிக்கை உண்டு உயர்பாதுகாப்பு வலயமாக படைத்தரப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்க தொடர்ந்து முயற்சிக்கிறேன். முடிந்த வரையில் காணிகளை விடுவிக்க நடவடிக்கைகளை எடுப்பேன்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும் வேளையில் காணிகளை விடுவிப்பார் அல்லது அது தொடர்பில் பச்சை கொடி காட்டுவார் - என்றார்.

அண்மையில் வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கொழும்பில் வடக்கு கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடத்திய சந்திப்பில் ஏன் கலந்து கொள்ளவில்லை என அமைச்சரிடம் கேட்கப்பட்டது. வடக்கில் எம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய இருந்தமையால் நான் வடக்கில் தங்கி இருந்தேன். அதனால் சந்திப்புக்குச் செல்லவில்லை. ஜனாதிபதியுடன் மக்களுக்காக தொலைபேசியில் கதைக்கக்கூடிய நிலையில் உள்ளேன். பல்வேறு தடவைகள் கதைத்தும் உள்ளேன்.

என் கட்சி சார்பில், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார் எனப் பதில் அளித்தார்.

## யாழ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவரது இறப்புத் தொடர்பில் தமக்குச் சந்தேகம் இருப்பதாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிரிழப்பதற்கு முன்னர் மாணவிக்கு எவ்விதமான மருந்து ஒவ்வாமைகளும் இரு;ததில்லை எனவும் செலுத்தப்பட்ட ஊசி மருந்து என்னவென்பது தமக்கு தெரிவிக்கப்படவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்ற குணரத்தினம் சுபீனா என்ற 25 வயதான மாணவி டிசெம்பர் 23 உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மாணவியின் இறுதிக்கிரியை திங்கட்கிழமை இடம்பெற்றது.

## விக்னேஸ்வரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில் 2024ஆம் ஆண்டு எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் என்பது தொடர்பில் யாருக்கும் உறுதியாகத் தெரியாது. முதலில் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்துவதற்கு வாய்ப்பு இல்லை. அப்படி நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்று அதில் எதிர்க் கட்சியினர் வெற்றிபெற்றால் அவர்கள் தற்போதைய ஜனாதிபதியை தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கும் என எதிர்வுகூறப்படுகின்றது.

அப்படி நடந்தால் கூட நான்கு பிரதான கட்சிகளிலும் முக்கியமானவர்கள் வேட்பாளர்களாக களமிறங்க கூடும். அவ்வாறு களமிறங்கினால் தனி ஒருவரினால் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்கினை பெற்றுக் கொள்ள முடியாது போய்விடும். இத்தகைய பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதியாக வருவாரா என்ற கேள்வி எழுகின்றது?

ரணில் ஜனாதிபதியாக வரவேண்டுமாக இருந்தால் மொட்டு கட்சியின் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவிற்கு சாதகமாக அமைந்தால் மாத்திரமே அவரால் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும் - என்றார்.



# சஜித்-டலஸ்..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலும் ராஜபக்சக்களும் ஊடகங்களும் கடந்த காலங்களில் அவ்வப்போது விதைத்த செய்திகள் இவை.

'ரணிலுக்கு 60 மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு'

'ரணிலை ஆதரிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நிமல் லான்சா சந்தித்தார்.'

'ரணிலுக்கு ஆதரவான நாடாளுமன்றக் குழுக்களை ஒருங்கிணைக்க அனுர யாப்பா...'

'மொட்டில் இருந்து பிரிந்தவர்களுடன் ரணில் புதிய கூட்டணியை உருவாக்குகிறார்...'

'ரணில் கூட்டணியின் முதல் சந்திப்பு விரைவில்...'

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுந்திர தேசிய கூட்டமைப்பு கூட்டணிக்கு எதிரான செய்திகளைப் பரப்பியது மட்டுமல்ல, அதே நேரக்கத்திற்காக ரணிலுக்கு ஆதரவான கூட்டணி கட்டியெ முப்பப்படுவதாகவும் ஊடகங்கள் -மூலம் செய்திகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அந்தச் செய்திகளின் ஒரே நோக்கம் எதிர்க் கூட்டணியை நசுக்குவதுதான்.

ஆனால், மொட்டுக் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட ரணிலுடன் இணைவதாகக் கூறி வெளியே வரவில்லை. ரணிலை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று கூறிய எரிசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தற்போது வாயை மூடிக்கொண்டுள்ளார். கட்சிக்காரர்களை ரணிலுடன் செல்லுங்கள் என்று கூறி சவாலை ஏற்றுக்கொண்ட பிரசன்ன ரணதுங்க தற்போது வித்தியாசமான நாடகம் ஆடுகிறார். குறைந்தபட்சம் ரணிலுடன் 60 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தக்கவைப்பார் என்று கூறும் நிமல் லான்சா, நான் ஜனாதிபதியாக ரணிலுடன் கூட்டணி சேர்வேன் என்று கூறவில்லை என்று இப்போது கூறுகின்றார்.

உண்மை என்னவென்றால், ரணில் தரப்பு இப்படி ஊடகங்களில் கூட்டணி பற்றிப் படம் காட்டிக்கொண்டிருந்த கடந்த ஒரு வருட கால மாக ஐக்கிய மக்கள் சக்தியும் சுதந்திர தேசிய கூட்டமைப்பும் கலந்துரையாடி ஒரு இணக்கப் பாட்டை எட்டின. இதனால் மொட்டுக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களால் ஆன குழு ஒன்று ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைக்கத் தயாராக இருக்கின்றது.

இந்த வெற்றிகரமான நகர்வைத் தாங்க முடியாத ரணில் மற்றும் ராஜபக்சக்களின் கூட்டு புதிய கூட்டணியை கடுமையாகத் தாக்கத் தொடங்கியுள்ளனன.

"கூட்டணிகள் அமையும்போது, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவது கடினம்..." என்று கூறி இந்தப் புதிய கூட்டணியைச் சீர்குலைக்க ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிவைக்கப்படுகின்றார்கள்.

கட்சியின் உறுப்பினர்கள் அடுத்த பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், எதிர்க்கட்சியில் இருக்கும் ஒரு கட்சி விளையாட வேண்டும். இடதுசாரித் தலைவரான கொல்வின் ஆர். டி சில்வா, ஒரு தடவை பேசும்போது ஆட்சி அமைப்பதற்காக எந்தப் பிசாசின் தாயுடனும் இணைந்துகொள்வேன் என்று கூறினார். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்க விரும்பினால் இதைக் கவனத்தில் கொண்டேயாகவேண்டும். 2015ஆம் ஆண்டு மைத்திரி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்க வந்தபோது, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைப் பார்த்துப் பயப்படவில்லை. மைத்திரி குழுவினருக்கு மாலை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

"எவ்வாறாயினும், ராஜபக்சவை பாதுகாத்தவர்கள் சுதந்திர தேசியக் கூட்டமைப்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். 18, 19, 20 திருத்தங்களுக்கு கையை உயர்த்தி ராஜபக்சக்களை ஆதரித்தவர்கள் அவர்கள். அந்த மக்கள் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றால், ஐக்கிய மக்கள் சக்தி தோல்வியடையும்..."

புதிய கூட்டணி மீது எறியப்படும் மற்றொரு கல் இது. எஸ்.பி.திஸநாயக்க 2001இல் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். ஆனால் அதற்கு முன்னதாக அவர் மீது ஐ.தே.க. பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தது. வடமேற்கு தேர்தல் மோசடிக்கு மூளையாக செயல்பட்டவர் எஸ்.பி, 1999 ஜனாதிபதி தேர்தலில் வாக்குப் பதிவுச் சாவடி மோசடியில் ஈடுபட்டவர், இறந்த மனிதர்களின் தலைகளை ரவி கருணாநாயக்கவின் வீட்டிற்கு அனுப்பியவர், சுசந்தி காவைப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கியவர் என்றெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டார். எஸ்.பிக்கு எதிராக ஐ.தே.க. நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்தது. அப்படியிருந்தும் எஸ்.பி. ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தபோது அவரது தவறுகளை அந்தக் கட்சி சுமக்கவேண்டும் என்று யாரும் கூறவில்லை.

அதேபோன்று மங்களவும் ஒரு கட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். 2008 இல், 1994 முதல் 2005 வரை ஊடகங்களில் தேர்தல் மோசடிகளை நியாயப்படுத்தி வந்தவர் மங்கள. அதற்காக அவரது கடந்த காலத் தவறுகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பொறுப்பேற்றுக்கொண்டதில்லை.

2015 ஆம் ஆண்டு மைத்திரியுடன் இணைந்து மஹிந்தவின் ஆட்சியிலிருந்து இருந்து வெளியேறிய குழுவினரே 18ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்வதற்கான நாடாளுமன்றத் தீர்மானம் ஆகியவற்றுக்கு ஆதரவாகக் கைதூக்கியவர்கள். ஆனால் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தபோது, அந்தக் கட்சியின் தாராளவாதக் குணத்தை யாரும் கூறவில்லை. பதிலாக ராஜபக்ஷக்களிடம் இருந்து அவர்களைப் பிரித்தெடுத்தால் ராஜபக்ஷக்களின் ஆட்சி முடிவுக்கு வந்துவிடும், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்றே அனைவரும் கூறினர்.

ஆனால், இப்போது மட்டும் பெரமுனவின் முன்னாள் உறுப்பினர்களான சுந்திர தேசியக் கூட்டமைப்பினரின் பாவங்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தி பாடுகள் சுமக்கவேண்டி வரும் என்று மிரட்டுகிறார்கள். அது அந்தப் புதிய கூட்டணி குறித்து ஏற்பட்ட அச்சத்தால் விளைந்தது. காய்த்த மரமே கல்லெறிபடும். அரகலய அன்னைக்குப் பிறக்கப்போகும் கூட்டணிதான் இந்தக் கூட்டணி. இப்போது கூட்டணி அமைக்கும் நேரம் வந்துவிட்டது.

'சிங்கய பய மல்லே' பாடல் பிரபலமானது. சிங்கத்துக்கு பயமில்லை, கூட்டணிக்கு பயப்படுவோம் என்று சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. 'அறகலய' குழந்தை பிறக்கும் நேரம் வந்துவிட்டது.

## மலையக...

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தம் பிரிட்டிஷ் அரசால் எமக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் ஆகும்.

இந்த வரலாற்றின் காரணமாக, எமது எதிர்கால வளர்ச்சிக்கு உதவிட வேண்டிய தார்மீக கடப்பாடு இன்று, இந்திய, பிரித்தானிய அரசுகளுக்கு உண்டு. அதை இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களும், இங்கிலாந்து பிரதமர் ரீஷி சுனக் அவர்களும் நிறைவேற்ற வேண்டும் எனக்கோருகிறேன். கடந்த வாரம் நானும், இராதாகிருஷ்ணனும் இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் அன்ரூ பெட்ரிக்கை சந்தித்தபோது, இதை நான் அவருக்கு தெளிவாக எடுத்து கூறினேன். அவரது இன்றைய பிரிட்டிஷ் மன்னர் சார்ள்சின் அரசு எமக்கு உதவிட வேண்டும். இந்தியாவின் கடப்பாடு பற்றி நான் பலமுறை இந்திய தலைவர்களிடம் எடுத்து கூறியுள்ளேன்.

இலங்கையின் கடப்பாடுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் நிறைவேற்ற வேண்டும். எனது கருத்தை இவர்களுக்கும் நான் பலமுறை எடுத்து கூறியுள்ளேன் என கூறினார்

# ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் மன்னிப்பு கோரியுள்ளது

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விமான சேவைகள் இரத்து மற் றும் தாமதங்கள் உள்ளிட்ட பயண இடையூறுகளால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களிடம் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் மன்னிப்புக் கோரியுள்ளது.

குறித்தகாலப்பகுதியில் இரண்டு எயார்பஸ் ஏ 330 விமானங்கள் பல நாள்கள் சேவையில் ஈடுபடாமையால் குறித்த விமான சேவை நிறுவனம் பல சவால்களை எதிர்கொண்டது.

உலகளாவிய விநியோக பற்றாக்குறை மற்றும் தொழில்நுட்ப கோளாறுகள் உள்ளிட்டவை சவால்களாக அமைந்தன.

இந்தநிலையில், பண்டிகைக் காலத்தில் பயணிகளின் பயணத்திட்டங்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் அதற்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது. (05)

# பெருமளவான மஞ்சள் மூடைகள் காக்கைதீவுப் பகுதியில் மீட்பு!

காக்கைதீவு பகுதியில் திங்கட்கிழமை பெருமளவான மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டன.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மீன்பிடி படகு ஒன்றில் இருந்து இந்த மஞ்சள் மூடைகள் மீட்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர் .

இவ்வாறு மீட்கப்பட்ட மஞ்சள் மூடைகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (05)

# சட்டவிரோத சாராய விற்பனை யாழ்ப்பாணத்தில் மூவர் கைது

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுபிரிவினரும் யாழ்பாண பொலிஸ் போதைதடுப்புபிரிவினரும் இணைந்து வெள;வேறு இடங்களில் நடத்திய சுற்றிவளைப்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யபட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 117 கால் சாராய போத்தல்களும், 9 முழு சாராய போத்தல்களும் நிலத்தில் புதைக்கப்பட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கும் பொழுது கைபெற்றப்பட்டன.

இவர்கள் யாழ்பாண தலைமைபொலிஸ் நிலையத்திற்கு மேலதிக விசாரணைக்காக கொண்டு செல்லபட்டு நீதிமன்றில் முற்படுத்தபடுவார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கை – நேபாளத்துக்கு இடையில் இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

இலங்கை – நேபாள கூட்டு ஆணைக்குழுவின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட அமர்வின் ஓரங்கமாக இருநாடுகளுக்கும் இடையில் விஞ் ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்து-வதற்கான இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலான இலங்கை - நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வு கடந்த 21 மற்றும் 22 ஆம் தி கதிகளில் காத்மண்டுவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நேபாள வெளியுறவுத்துறை அமைச்சர் நாராயண் பிரகாஷ் சவுத்துடன் இணைந்து இலங்கை – நேபாள கூட்டு ஆணைக்குழுவின் ஆரம்ப அமர்வுக்கு இணைத்தலைமை தாங்கினார்.

அதேவேளை இவ்வமர்வில் வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத்துறை, கல்வி, பாதுகாப்பு, குடியகல்வு, கலாசாரம், மக்கள் - மக்கள் தொடர்பு என்பன உள்ளடங்கலாக இருநாடுகளினதும் பரஸ்பர அக்கறைக்குரிய பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இத்துறைகளில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கூட்டு ஆணைக்குழு அமர்வில் ஆராயப்பட்டதுடன், அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கான வழிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோன்று இலங்கையும், நேபாளமும் அங்கத்துவம் வகிக்கும் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் கூட்டணிகளின் சமகால நகர்வுகள் தொடர்பில் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பொதுவான சவால்களை எதிர்கொள்வதிலும், பரஸ்பர அக்கறைக்குரிய விடயங்களை மேம்படுத்திக்கொள்வதிலும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு இணக்கம் எட்டப்பட்டது.

அத்தோடு இலங்கை - நேபாளம் ஆகிய நாடுகளுக்கு இடையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் போன்ற துறைகளில் கல்விசார் ஒத்துழைப்பை வலுப்படுத்திக்கொள்ளும் வகையிலான இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

மேலும் இக்கூட்டு ஆணைக்குழு அமர்வுக்கு அப்பால் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேபாள ஜனாதிபதி ராம் சந்திர பவுடேல் மற்றும் பிரதமர் புஷ்ப கமல் தஹல் ஆகியோரையும் சந் தித்ததுடன், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் நாராயண் பிரகாஷ் சவுத்தையும் சந்தித்து இருதரப்புப் பேச்சுகளில் ஈடுபட்டார். அதுமாத்திரம ன்றி நேபாளத்தைச் சேர்ந்த பிரபல வணிகர்களைச் சந்தித்த அவர், இலங்கையில் உள்ள முதலீட்டு வாய்ப்புக்களை இனங்கண்டு, அதில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வருமாறு அழைப்புவிடுத் தார். (05)

# சட்டவிரோத மின்சாரக் கம்பியில் சிக்கி ஒருவர் பரிதாப உயிரிழப்பு

பதுளை - அம்பகஸ்தோவ, தங்கமுவ பிரதேசத்தில் சட்டவிரோத மின்சார கம்பியில் சிக்கி ஒருவர் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அம்பகஸ்தோவ -தங்கமுவ, மிரிஸ்வத்தை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

போஞ்சி பயிரிடப்பட்ட தோட்டத்திற்கு வரும் வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக அதன் உரிமையாளரால் சட்டவிரோதமாக போடப்பட்ட மின்சார கம்பியில் சிக்கியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 35 வயதுடைய போஞ்சி தோட்ட உரிமையாளர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கடற்பிரதேசத்தில் 4 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு!

## கடற்படை அறிவிப்பு

யாழ்ப்பாணம் கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் இலங்கை கடற் படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 35 கிலோவுக்கும் அதிகமான 14 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடல் வழிகள் ஊடாக இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்கும் நோக்கில் கடற்படையினர் நாட்டின் கரையோர மற்றும் கடற்பரப்புகளில் 24 மணிநேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கைகளின் ஒரு கட்ட மாக வடக்கு கடற்படையினர் யாழ். வெத்திலைகேணி கடற்கரை பகுதி யில் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சந்தேகத்திற்கிட மான முறையில் கரை ஒதுங்கிய சாக்கு மூடையை சோதனைக்கு உட்படுத்திய போது 16 சாக்கு பொதி களில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 35 கிலோ 100 கிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் கடற்படையின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் காரணமாக கேரள கஞ்சாவை நாட்டிற்கு கொண்டு வர முடியாமல் கடத்தல் காரர்கள் விட்டுச் சென்றிருக்கலாம் எனவும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 14 மில்லியன் ரூபா எனவும் கடற்படை தெரிவித்துள்ளது. மேலதிக நடவடிக்கைகளை இலங்கை கடற்படை முன்னெடுத்துள்ளது. (05)

# மருந்து இறக்குமதி விநியோகத்தில் முன்னேற்றம் சுகாதார அமைச்சின் செயலாளர் கூறுகின்றார்!

*மருந்துகளின் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முன்னேற்றம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.*

*அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -*

*கடந்த இரண்டு வாரங்களில் மருந்து இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மக்களின் சிகிச்சைகளுக்கு அத்தியாவசிய மான மருந்துகளை விநியோகிப்பதில் பல பிரச்சினைகள் மற்றும் தடைகள் காணப்பட்டன.*

*எவ்வாறிருப்பினும் கடந்த இரண்டு வாரங்களில், நாட்டிலுள்ள பல்வேறு வைத்தியசாலைகளின் நிலைவரங்களை ஆராய்ந்த போது அவற்றுக்கு கிடைக்கப் பெற்ற மருந்துகளின் அளவு போன்றவற்றில் முன்னேற்றம் காணப்பட்டது.*

*மருந்துகளின் விநியோகம் குறித்து ஆழமான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. அதற்கமையவே இந்த முன்னேற்றம் அடையாளங் காணப்பட்டுள்ளது.*

*எனினும் குறிப்பிட்ட சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அந்த மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (05)*



காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.12.2023இல் வெளியிடப்பெற்றது.